## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேசச் சட்டம் மற்றும் ஜெனீவா ஒப்பந்தத்திலுள்ள போர் விதிமுறைகளை முற்றிலுமாக மீறி 50,000-க்கும் மேற்பட்ட அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஒரு இனப் படுகொலை-**genocide**-ஐ இலங்கை அரசாங்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் நேற்று கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்தது, திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். பொறுங்கள். நீங்கள் நேற்று கொடுத்திருக்கிறீர்கள். ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-35*

### (ஆ) தமிழ்நாட்டில் அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்கிற செய்தியால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள அகதிகள் முகாம்களில் வாழ்ந்துகொண்டுள்ள இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற செய்தியைக் கேட்டு அவர்கள் ஆழ்ந்த பீதியிலும், பயத்திலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை எந்தச் சூழ்நிலையிலும் இலங்கைக்குத் திரும்ப அனுப்பக்கூடாது. அவர்களது உயிருக்கு அங்கே உத்தரவாதம் இல்லாத சூழ்நிலை ஏற்படும். எனவே, அவர்களைத் திருப்பி அனுப்பக்கூடாது என்பதோடு, அவர்களை ஐ.நா. அவையின்கீழ் இயங்கிவருகிற அகதிகள் ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டும். உரிய பாதுகாப்பும், கூடுதல் வசதியும் செய்து கொடுக்கின்ற காரணத்தினாலே,

2009 ஜூன் 26] [திரு. ஜி.கே. மணி]

ஐ.நா. அவையின்கீழ் இயங்கி வருகிற அகதிகள் ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டும், அவர்களைக் கொண்டுவரவேண்டும் என்ற வேண்டுகோளை நமது அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நமது தமிழக அரசு நடுவண் அரசை வலியுறுத்த வேண்டும், அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடுகள்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

*(பின்னர் அ.இ.அ.தி.முக. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### அரக்கோணம் வட்டம், இச்சிப்புதூர், M.R.F. tyre தொழிற்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரக்கோணம் வட்டம், இச்சிப்புதூரில் உள்ள M.R.F. tyre தொழிற்சாலைத் தொழிலாளர்கள் இரண்டு மாதங்களாகப் போராட்டம் மேற்கொள்வது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், திரு. கோவை தங்கம் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும், விதி 55 மற்றும் 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்கள், சுருக்கமாக, கட்சிக்கு ஒருவர் என்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

## (ஆ) தமிழ்நாட்டில் அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்கிற செய்தியால் ஏற்பட்டுள்ள நிலை—*தொடர்ச்சி*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சினை குறித்து......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் **mention** செய்துவிட்டீர்கள். நீங்கள் **mention** செய்ய வேண்டும் என்றுதான் நான் உட்கார்ந்திருந்தேன். நீங்கள் mention செய்துவிட்டீர்கள், **record** ஆகியிருக்கிறது உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கோ.க. மணி அவர்கள் தன்னுடைய கருத்தை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறார்கள். அதற்கு ஆளும்கட்சித் தரப்பிலிருந்து உரிய பதில் நாளைக்குத் தரப்படும். அதுவரையிலே அவர் பொறுமையாக இருப்பது நல்லது. இன்றையதினம் உள்ளாட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பல உறுப்பினர்கள் பேச வேண்டும். இன்றையதினம் முக்கியத்துவம் வாய்ந்த M.R.F. பிரச்சினையை நீங்கள் எடுக்கவிருக்கிறீர்கள். எனவே, காலத்தினுடைய அருமையைக் கருதி நீங்கள் அவையை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.க. மணி அவர்களே, நீங்கள் சொன்ன அனைத்தும் **record** ஆகியிருக்கிறது. ஆளும்கட்சி சார்பில் பதில் வரும். உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

## அரக்கோணம் வட்டம், இச்சிப்புதூர், M.R.F. tyre தொழிற்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.